மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எடப்பாடி

**OS.No. 220/2019**

சாட்சி : **PW-2**

பெயர் : கோவிந்தசாமி

த.பெ. : பெருமாள்கவுண்டர்

நாள் : **22.07.2026**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நத்தம் நிலம் என்றால் என்ன தெரியுமா புறம்போக்கு நிலம் ஆகும். தாவா 2 அட்டவணை சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் மற்றும் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது, எனக்கு எழுத படிக்க தெரியாது. கிழமேலாக செல்லும் பஞ்சாயத்து ரோட்டிற்கும் அடுத்த இடத்தில் 2-ம் வாதியின் தாயார் குடியிருந்தார் என்றால் சரிதான். 2-ம் வாதியின் தாயார் குடியிருந்த நிலத்திற்கும் வடக்கே வீடிருந்தது என்றால் சரிதான், மேற்படி வீடு இரண்டாக தடுக்கப்பட்டிருந்தது என்றால் இல்லை, ஒரே வீடாக இருந்தது. மேற்படி வீடானது 2-ம் வாதியின் தந்தை முத்து குடியிருந்த வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டின் கிழக்கே 1-ம் பிரதிவாதி கோபால் தறி ஓட்டிவருகிறார் என்றால் சரிதான்.

2) குடும்ப ஏற்பாடு எத்தனை வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டது என்றால் சுமார் 30 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்டது. மேற்படி குடும்ப ஏற்பாட்டின் போது 2-ம் வாதி, 1-ம் பிரதிவாதிக்கு ரூ.10000/- கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் எழுதப்பட்டதா என்றால் இல்லை, வாய்மொழியாக ஏற்படுத்தப்பட்டது. ரூ.10000/- உண்மையிலேயே 2-ம் வாதியால், 1-ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டிருந்தால் ரசீது ஏதேனும் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் எனவே ரூ.10000/- கொடுத்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2003 ஆம் வருடம் பாவாயி குடியிருந்த வீட்டை 2-ம் வாதி அடித்து உடைத்தாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது, சொன்னார்கள். தாவா 1-ம் அயிட்ட சொத்தின் அசல் பத்திரத்தை

பஞ்சாயத்தின் மூலம் 2-ம் வாதிக்கு கொடுக்கவில்லை என்றும், 2-ம் வாதி, பாவாயி வீட்டை உடைத்து பத்திரத்தை எடுத்து சென்றுவிட்டார் என்றால் சரியல்ல.

3) தாவா 1ம் அயிட்ட சொத்தின் அசல் பட்டா பஞ்சாயத்தின் மூலம் 2-ம் வாதிக்கு கொடுக்கவில்லை என்றும், 2-ம் வாதி, பாவாயி வீட்டை உடைத்து பட்டா எடுத்து சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. 2-ம் வாதி ரவி எங்கு குடியிருக்கிறார் என்றால் செவடானூரிலும் இருப்பார், கரிக்காபட்டியில் குடியிருக்கிறார். தாவா 2-ம் அட்டவணை சொத்தில் 2-ம் வாதி ஓட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா B அட்டவணை சொத்து குறித்து யாருக்கும் அரசால் பட்டா வழங்கப்படவில்லை என்றும், எனவே வாதிக்கு மேற்படி சொத்தில் உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கலைஞர் திட்டத்தின் மூலம் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். தாவா B அட்டவணை சொத்தில் 2-ம் வாதி கலைஞர் திட்டத்தின் மூலம் வீடு கட்டி குடியிருக்கவில்லை என்றும், 2-ம் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) தாவா A மற்றும் B அட்டவணை சொத்துகள் எந்தெந்த திசையில் உள்ளது என்றால் திசை தெரியாது. 2-ம் வாதிக்கு இரண்டு மனைவிகள் என்றால் இல்லை, ஒரு மனைவி தான். 1-ம் வாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 1-ம் அட்டவணை சொத்தில் ஒரு வீடுள்ளது என்றும், அதில் ஒரு அறையில் 2-ம் வாதியும், ஒரு அறையில் 1-ம் பிரதிவாதியும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, தனியாக குடியிருந்து வருகிறார்கள். 1-ம் வாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. யார்யாருக்கு எந்தெந்த திசையில் உள்ளது பிரித்து பத்திரம் எழுதி கொண்டோமா என்றால் இல்லை, வாய்மொழியாக பிரித்துகொண்டோம். தாவா சொத்தை 2-ம் வாதிக்கும், 1-ம் பிரதிவாதிக்கும் வாய்மொழியாக பிரித்து கொடுத்தோம் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Sd/-Govindasamy
Witness signature

Sd/-F.Bernal,
DM cum JM, Edappadi.